**வாக்குமூலம்**
**சார்பு நீதிமன்றம், ஒட்டன்சத்திரம்.**
**O.S.No.77/2026**
**வழக்கு சாட்சி P.W.1**
**1873ம் ஆண்டின் 10வது விதியின்படி திரு.K.கார்த்திக் அவர்களால் திறந்த நீதிமன்றத்தில் சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : அம்சவேணி | தொழில் | : விவசாயம் |
| தகப்பனார் பெயர் | : பழனிச்சாமி | கணவர் பெயர் | : கோவிந்தராஜ் |
| கிராமம் | : அப்பியம்பட்டி | வயது | : சுமார் 46 |
| தாலுக்கா | : ஒட்டன்சத்திரம் | நாள் | : 17.08.2026 |
| மாவட்டம் | : திண்டுக்கல் | | |

<u>முதல் விசாரணை :</u>

திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் வட்டம், திருமலைக்கவுண்டன்வலசு அஞ்சல், அப்பியம்பட்டி கிராமம், அப்பியம்பட்டியில் வசிக்கும் கோவிந்தராஜ் அவர்கள் மனைவி சுமார் 46 வயதுள்ள அம்சவேணி ஆகிய நான் சத்தியப்பிரமாணத்தின் பேரில் கூறும் முதன்மை சாட்சிய நிரூபண பிரமாண வாக்குமூலம்.

நான் இந்த வழக்கின் 1ம் வாதி ஆவேன். நான் இன்று தாக்கல் செய்திருக்கும் நிரூபண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான் ஆகும். அதில் உள்ள சங்கதிகள் யாவும் என்னால் சொல்லப்பட்டு, தயார் செய்யப்பட்டு, அவற்றை நன்கு படித்து புரிந்து கொண்டு கையெழுத்து செய்திருக்கிறேன். எனது தரப்பில் கீழ்கண்ட ஆவணங்களை குறியீடு செய்ய வேண்டுகிறேன்.

| வரிசை எண் | தேதி | ஆவணங்கள் | ஆவணத்தின் தன்மை |
|---|---|---|---|
| 01 | 06.08.1980 | பெ.நாச்சிமுத்துக்கவுண்டர், சி.நாச்சிமுத்துக் கவுண்டர், லேட்.ராமசாமிக் கவுண்டர் மகன் | வா.சா.ஆ.1 |

| | | | |
|---|---|---|---|
| | | மைனர்.நாட்டுத்துரை மற்றும் கருப்பணகவுண்டர் ஆகியோர்களுக்கிடையே ஏற்பட்ட பாகப்பிரிவினை ஆவணம் – சார்பதிவாளர் அலுவலக நகல் | |
| 02 | 15.09.2014 | லேட்.ராமசாமிகவுண்டர் மனைவி செல்லம்மாள் (எ) செல்லாத்தாள் அவர்களது மகன் 2ம் பிரதிவாதி நாட்டுத்துரை (எ) செல்வராஜ் மற்றும் கருப்பணகவுண்டர் ஆகியோர்களுக்குள் ஏற்பட்ட பாகப்பிரிவினை பத்திரம் – சார்பதிவாளர் அலுவலக நகல் | வா.சா.ஆ.2 |
| 03 | 29.05.2020 | கருப்பணகவுண்டர் இறப்பு சான்று – கணினி பதிவிறக்க நகல் | வா.சா.ஆ.3 |
| 04 | 22.07.2020 | கருப்பணகவுண்டர் வாரிசு சான்று – கணினி பதிவிறக்க நகல் | வா.சா.ஆ.4 |

(தொடர்ச்சியாக ஆவணங்கள் குறியீடு செய்ய வழக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.)

C JAYAPPRAKASH

Digitally signed by C JAYAPPRAKASH
Date: 2026.08.17 18:23:50 +0530

சார்பு நீதிபதி
ஒட்டன்சத்திரம்